சாத்தூர் ஊராட்சி மன்ற கோரிக்கை!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. The Official Organ Of The D.P.F.

தனி இதழ்: ஒரு அணா	சென்னை: ஆனி மீ 10உ வியாழன் (24—6—54)	மலர்: 2
இலங்கையில் 10 சதம்	வெளியூர்: ஆனி மீ 11உ வெள்ளி (25—6—54)	இதழ்: 9

தீப்பெட்டி "எக்சைஸ்" வரியில் பங்கு கொடுக்க யூனியன் சர்க்கார் மறுப்பு

கோயில்பட்டி, சிவகாசி கோரிக்கைக்கும் அதே கதி!

சாத்தூர் நகரில் பல தீப்பெட்டித் தொழிற்சாலைகள் உள்ளன. அத்தொழிற்சாலைகளில் ஏராளமான பெண்களும், சிறுவர்களும், வயது வந்த ஆண்களைப்போலவே வேலை செய்கின்றனர்.

தொழிற்சாலைகளில் பணி புரிவது போலவே, அவரவர்கள் வீட்டில் இருந்துகொண்டே, தொழில் செய்து வாழ்க்கை நடத்த, தீப்பெட்டித் தொழில் ஒரு சிறந்த 'குடிசைத் தொழிலா'கவும் இருந்து வருகிறது.

அரை வயிறு உண்பதற்காவது வழி செய்யும் வகையில் தொழில் கிடைக்கும் ஊருக்கு, வேறு கைத்தொழிலுக்கு ஏற்பாடு இல்லாத சுற்றுப்புற ஊர்களில் உள்ளவர்கள் குடும்பம் குடும்பமாகக் குடிபெயர்ந்து தங்குவது இயல்பு.

அளவுக்கு அதிகமாக மக்கள் தொகை பெருக்கெடுக்கிற பொழுது, ஒரு ஊராட்சி மன்றத்தின் கடமையும் பொறுப்பும், அவ்விரண்டையும் நிறைவேற்றுவதற்கான செலவும் கூடுதலாக இடமிருக்கிறது.

புதிய கல்வி நிலையங்கள், மருத்துவ நிலையம், சுகாதார ஏற்பாடு, ஊரை சுத்தமாக வைத்துக் கொள்ளக் கூடுதலான வசதி, குடிதண்ணீருக்கு ஏற்பாடு செய்தல் ஆகியவைகளுக்கான செலவிற்கும் பணம் அதிகமாகத் தேவைப்படுகிறது.

தீப்பெட்டிகளுக்கு, யூனியன் சர்க்கார் 'எக்சைஸ்' வரி எனும் பெயரில் பெருந்தொகையை வசூலித்து வருகிறது. அதாவது 60 குச்சிகள் கொண்ட தீப்பெட்டி ஒன்றுக்கு 0—0—4 தம்படி வீதம் (144 தீப்பெட்டிகளுக்கு ரூ. 3/) மத்திய சர்க்கார் 'எக்சைஸ்' வரி வசூலிக்கிறது.

அந்த வரியில், நூற்றுக்கு பத்து ரூபாய் வீதம், நகர முன்னேற்றத்திற்கானச் செலவிற்காகத் தனக்குக் கொடுக்க வேண்டுமென, சாத்தூர் ஊராட்சி மன்றம், யூனியன் சர்க்காருக்கு மனு கொடுத்தது.

தீப்பெட்டி 'எக்சைஸ்' என்ற வரியில் பங்குதர முடியாது என யூனியன் சர்க்கார். ஊராட்சி மன்ற கோரிக்கையை உதறித் தள்ளிவிட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சாத்தூரைப் போலவே தீப்பெட்டித் தொழிற்சாலைகள் மிகுதியாக உள்ள சிவகாசி நகராட்சிமன்றமும், யூனியன் சர்க்காரை தீப்பெட்டி 'எக்சைஸ்' வரியில் பங்கு கேட்டிருந்தது.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கோயில்பட்டி ஊராட்சி மன்றமும், 'எக்சைஸ்' வரியில் பங்குதர வேண்டுமெனக் கேட்டிருந்தன. 'முடியாது' என யூனியன் சர்க்கார் ஒரேயடியாகக் கூறிவிட்டது.

மாநில சர்க்கார் அதிகார வரம்பை ஒடுக்க!

ஸ்தல ஸ்தாபன நிர்வாகத்திலும் குறுக்கிட சதி!

யூனியன், சர்க்காரின் எதேச்சாதிகாரம்!

"இந்தியத் துணைக் கண்டம் முழுவதிலும் உள்ள ஸ்தல ஸ்தாபனங்களில், ஒரே வகையான நிர்வாக முறையைப் புகுத்துவதற்கான சட்டமொன்றை மக்கள் சபையில் நிறைவேற்ற யூனியன் அரசாங்கம் முயற்சித்துக் கொண்டு இருக்கிறது. அத்துறையில், மாநில ஸ்தல ஸ்தாபன அமைச்சர்களின் கருத்தும் கோரப்பட்டு இருக்கிறது. அதுபற்றி தங்களுக்குள் கலந்து பேசி, முடிவு கட்ட, ஸ்தல ஸ்தாபன அமைச்சர்களின் மாநாடு ஒன்று அண்மையில் சிம்லா நகரில் நடைபெற இருக்கிறது."

"ஸ்தல ஸ்தாபன நிர்வாகம் பற்றி எல்லா விஷயங்களையும் விவாதிப்பதற்காக விரிவானதொரு விஷய அட்டவணை தயாரிக்கப்பட்டுள்ளது. அவைகளில் சிலவற்றை மாநில அரசுகள் ஒப்புமானால், ஸ்தல ஸ்தாபன நிர்வாகத் துறையில் மாநில அரசுகள் கொண்டுள்ள அதிகாரங்களை இழக்க வேண்டியதாயிருக்கும்,"

—இவ்வாறு, திரு—கொச்சி மாநில ஸ்தல ஸ்தாபன மந்திரி பி. கே. குஞ்சு குறிப்பிட்டுவிட்டு, "மாநாட்டில் பஞ்சாயத்துகளுக்கு நீதி நிர்வாக அதிகாரம் தருவது பற்றியும் யோசிக்கப்படும்" என்றும் தெரிவித்தார்.

'கிலி'யின் எதிரொலி!

"ரஷ்யாவும், சீனாவும் ஆசியாவின் வளங்களை ஆட்கொண்டு, சரிவரச் செயல்படும் வலிமையும், ஜப்பான் கடற்படைக்கு ஊறு கொடுக்கும் வலிமையும் அழித்துவிட்டால், ஜப்பானில் செம்மேகம் சூழ்ந்துவிடும்; இந்நிலையில் மேற்குலகின் அரசியல் பொருளாதார நிலைமையின் தீர்நிலையாகிவிடும்; எனவே. ஜப்பான், ரஷ்யாவின் ஆதிக்கத்தில் விழாமல் காக்க வேண்டியது அவசியமாகும்,"

என்று, ஜனாதிபதி ஐசன்ஹோவர் பத்திரிகாசிரியர் கழகக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

மின்சார வினியோக உரிமை

சென்னை சர்க்கார்மீது சட்ட நடவடிக்கை?

திருப்பூர், ஜூன் 22—

நேற்று நடைபெற்ற நகரசபைக் கூட்டத்தில் மின்சார வினியோக உரிமையை சுப்ரீம் கோர்ட் தீர்ப்பின்படி சென்னை சர்க்கார் முனிசிபாலிடிக்குத் திருப்பித் தராவிட்டால் சர்க்கார் மீது சட்ட நடவடிக்கை எடுக்கலாம் என ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மனமுடைந்த கதியில் நம்பிக்கை நட்சத்திரம்!

பற்றற்ற நிலையில் பிரான்ஸ்—சீனப் பிரதமர் சந்திப்பு!

பேர்ன், ஜூன் 24—

பிரெஞ்சு நாட்டின் புதிய பிரதமர் மெண்டஸ்-பிரான்ஸ், சீனப் பிரதமர் சூ-என்-லாய் இருவரும் 23-ந் தேதி இரவு திடீரென சந்தித்துப் பேசினர்.

சகஜமான ராஜதந்திர உறவுகள் இல்லாத பிரான்ஸ்—சீனப் பிரதமர்கள் சந்திப்பது இதுவே முதல் தடவையாகும்.

இந்தோ-சீனாவில் சமாதானம் ஏற்படுத்துவது குறித்து இரு பிரதம மந்திரிகளும் விவாதித்தனர். 2 மணி நேரத்திற்கு அதிகமாகவும் பேச்சு வார்த்தை நீடித்தது.

"மனம் விட்டும், பட்டவர்த்தனமாகவும், பரிபூரணமாகவும் நாங்கள் இந்தோ-சீன நிலைமை பற்றி கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம்; உண்மையிலேயே சிக்கலான இப்பிரச்சினையில் முன்னேற்றம் காண முடியும்," என்று இரு தரப்பினரும் விடுத்துள்ள அறிக்கைகள் குறிப்பிடுகிறது.

பிரெஞ்சுப் பிரதமருடன் சந்தித்துப் பேச வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டதால், இன்று மாலை டில்லிக்கு வர வேண்டிய சீனப் பிரதமர் வெள்ளிக்கிழமை காலையில்தான் வந்து சேருவார்.

பண்டிதரை சீனா அழைக்கும்

புதுடில்லிக்கு வருகை தரும் சீனப் பிரதமர், பீகிங்குக்கு வருமாறு இந்தியப்பிரதமர் நேருவை அழைக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது.

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் அட்லியும், அனுரின் பெவானும் சீனாவிற்கு வருவதால் இந்தியப் பிரதமரும் செல்ல சந்தர்ப்பம் கிடைத்தால், சீன அதிபர் மாசே-துங்கையும், வியட்மின் தலைவர் ஹோ-சி-மின்னையும் சந்திக்க அவருக்கு வாய்ப்பு கிடைக்கக் கூடுமாம்!

'ஜாதிப் பாகுபாடு ஒழிக்கப்பட வேண்டும்'

'ஜாதிப் பாகுபாடு நிலைத்திருக்கிற வரையில் முன்னேற்றம் இல்லை'

ஜாதி ஏற்பாட்டை டாக்டர் லோகியா சாடுகிறார்!

கோவை, ஜூன் 24—

"தமிழ் நாட்டிலே நிலவுகிற சாதிப் பாகுபாடுகளை வன்மையாகக் கண்டிக்கிறேன்; உயர்வு—தாழ்வு என்ற சாதிப் பிரிவினை இருத்தலாகாது; அத்தகு பிணக்குகள் ஒழிக்கப்பட வேண்டும்; அந்தச் சாதி வேற்றுமை ஒழிப்பில் பிரஜா-சோஷலிஸ்டு கட்சியினர் அதிக அக்கரை காட்ட வேண்டும்; சாதிப் பாகுபாடுகள் நிலவுகிறவரை இந்தியாவில் எந்த உண்மையான முன்னேற்றத்தையும் காண முடியாது."

என அகில இந்திய பி-சோ. கட்சியின் செயலாளர் ராம் மனோகர் லோகியா தொழிலாளர் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"காங்கிரஸ் ஆட்சியின் பயனால் எந்தவித முன்னேற்றமும் காணப்படாததால், சுதந்திரம் பெற்ற கடந்த ஏழாண்டுகளாய் பெருத்த பொருளாதார நஷ்டம்தான் ஏற்பட்டுள்ளது. உர உற்பத்திக்காக சில தொழிற்சாலைகளும், நீர்ப்பாசனத்திற்காக சில அணைக்கட்டுகளும் எழுப்பி விடுவதினாலேயே நாடு முன்னேறி விட்டதெனக் கொள்ளமுடியாது. வெள்ளை ஏகாதிபத்தியவாதி கூடத்தான் 25,000 மைல் நீள ரயில் வண்டித் தொடர் பாதைகளும், 800 சேவாலைகளும் உண்டாக்கினான். நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் மகிழ்வோடு நல்லதொரு வாழ்வு நடத்துவதுதான் முன்னேற்றம் எனப்படும்.

வெள்ளைக்காரன் வெளியேறியதற்கும், குறுநில மன்னர்களும், நிலப் பிரபுக்களும் ஒழிக்கப்பட்டதற்கும், காங்கிரஸ் அரசாங்கம் சாதித்தவைகளுக்கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது. அத்தகு மாற்றங்கள் எல்லாம், இந்திய மக்களின் இடைவிடாத போராட்டங்களினால் நிகழ்ந்தவையாகும்.

முதல் 5 ஆண்டுத் திட்டம் சாதாரண மனிதனுக்கு எந்தவித நன்மையும் செய்யவில்லை. இரண்டாம் 5 ஆண்டுத் திட்டத்தில்தான் ஏதேனும் நன்மை கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது," என்றார்.

தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"தமிழ் நாட்டில் விவசாயிகளுக்குத் தாங்கமுடியாத அளவுக்கு அதிகமான வரி விதிக்கப்படுகிறது. மேலும், நிலத்

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை
சென்னை 24—6—54 வியாழன்

குரங்குச் சேட்டை!

கருத்து வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகள் உருவெடுக்கின்றன. சூழ்நிலைக்கு ஒப்ப நடைமுறைகளை அமைத்துக் கொண்டு, அக்கட்சிகள் செயல்பட்டு வருகின்றன.

அரசியல் கட்சிகளுக்குள், அடிப்படை கோட்பாடுகளில் முரண்பாடு இருக்கத்தான் இருக்கும். ஒன்றிரண்டு கொள்கைகளில் ஒருமைப்பாடு இருப்பதும் எதிர்பார்க்கக்கூடியதே!

மக்களுக்கு இன்றியமையாத தேவைகள் என, சில திட்டங்களை, மக்கள் முன் வைக்கின்றன அரசியல் கட்சிகள். பொதுமக்களைக் கூட்டி, அத்திட்டங்களுக்கு விளக்கமும் தரப்படுகின்றன. தாங்கள் உவந்து ஏற்கும் கொள்கைகளைக் கொண்ட அரசியல் அமைப்புகளை, மக்கள் ஆதரித்தும் பின்பற்ற முன்வருகின்றனர்.

தங்கள் கட்சிக்கு மாறுபட்டக் கட்சியுடன் கொள்கைகளையும், நடைமுறைகளையும் தக்கச் சான்றுகள் காட்டி, மறுத்துரைத்து, மக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும், தங்கள் கட்சிக்குச் சாதகமாக்கிக் கொள்ள முன்வருவது, அரசியல் நாகரீகமாகும். அந்த உயர்ந்த போக்கைத்தான், அரசியல் கட்சிகளிடமிருந்து மக்கள் எதிர்பார்க்கவும் செய்கின்றனர். இப்போக்கை விடுத்து, வனவிலங்குகளிடை இயல்பாகக் காணப்படும் காட்டு முறையை, மக்கள் ஆதரவைத் திரட்ட, அரசியல் கட்சிகள் மேற்கொள்ளுவது விரும்பக் கூடியதுமல்ல — வரவேற்கக் கூடியதுமல்ல — வெறுத்து ஒதுக்கத்தக்கதுமாகும்!

ஒரு அரசியல் கட்சி ஏற்றுக் கொண்டுள்ள திட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை, கண்ணியமான முறையில் சுட்டிக் காட்டி, தங்கள் கட்சிக்கு மக்களின் கூட்டுறவைத் தேடுவதை விடுத்து, அதே அரசியல் கட்சித் தலைவர்களை மாசுபடுத்தியும், வாயில் வந்தபடி எல்லாம் வரம்பின்றி வசை பாடியும், கையாண்டு செய்தும் தூற்றுவது கொஞ்சமும் பொருந்தாது.

பல அரசியல் கட்சிகளைப் பின்பற்றும் மக்களிடத்திலும், கோபத்தையும் வெறுப்பையும் மூட்டிவிடும் அப்போக்கு!

குறிப்பிட்ட ஒரு அரசியல் கட்சி கூறிவரும் கோட்பாடு, குறைபாடு உடையது என எடுத்துக் காட்டுவதை விடுத்து, அக்கோட்பாட்டை மக்களிடம் விளக்கிக் கூறும் தலைவர்களைக் களங்கப்படுத்திப் பேசுவது, குறிப்பிட்ட கோட்பாட்டில் குறைபாடு எதுவுமில்லாததால்தான், அக்கோட்பாட்டைக் கொண்டுள்ள தலைவர்களையே தனிப்பட்ட முறையில் தாக்குகின்றனர் அதிகாரர்கள், என்ற உண்மையும் மறுக்கக்கூடியதல்ல! கொள்கையில் குறை காணமுடியாவிட்டால்; அதை எடுத்துக் காட்டி இடித்துரைப்பதுதான் நியாயம். அவ்வாறு செய்யாமல், ஒரு கொள்கையைப் பிரசாரம் செய்யும் தலைவர்களைக் களங்கப்படுத்தி உளறிக் கொட்டுவது, அப்படிச் செய்யும் அரசியல் கட்சிகள், தங்கள் கட்சியின் ஆபாச நடைமுறையைத் தாங்களே விளம்பரப்படுத்திக் கொள்வதாகவும் முடியும்.

அரசியல் கட்சிகளுக்குள் எத்தகைய கருத்து வேறுபாடு இருப்பதாக இருந்தாலும், தங்களுக்குள் ஒன்றை ஒன்று பகைத்துக் கொள்ளாமல், நட்பு முறையில் கட்சிகள் இயங்க வேண்டும் என்ற சிறந்தக் குறிக்கோளைக் கொண்டு இயங்கி வருவது நமது தி. மு. கழகமேயாகும். நமது கழகம் துவக்கப்பட்ட நாள் முதல், இன்று வரை, அதே நோக்குடன்தான் பணியாற்றி வருகிறது. அப்பணியில் கணிசமான வெற்றியும் பெற்றிருக்கிறது. நமது கழகத்திற்கு, திராவிட மக்களின் ஆதரவு தினம் தினம் வேகமாகப் பெருகி வருவதற்கும், இது ஒரு முக்கிய காரணமாகும்.

எந்தக் கட்சியைப் பின்பற்றுகிறவர்களாக இருந்தாலும், மக்களுக்குள் இருந்து வரும் மாறுபட்டக் கருத்துக்காக, ஒருவர் கழுத்தை ஒருவர் நெறுக்குவதற்கு பதிலாக, நட்பு முறையில் கொள்கைப் பற்று வளம் பெற வேண்டும் என்பதும் தி. மு. கழகத்தின் விருப்பமாகும். அத்தகு சூழ்நிலையை உண்டாக்குவதில் நமது கழகம் அரும்பாடுபட்டிருக்கிறது—பட்டும் வருகிறது.

நமது கழகக் கோட்பாடுகளைப் பிடிக்காத மாற்றுக் கட்சியினர், நமது கழகவளர்ச்சியைத் தடுத்து நிறுத்த கையாண்ட—கையாண்டு வருகிற—விரும்பத்தகாத இழிமுறைகளோ ஏராளம். எடுத்துக்காட்டாக, நமது கழகக் கொடியை, இரவில் களவாடுவதையும், பறக்கவிடக் கூடாது என அச்சுறுத்துவதையும் குறிப்பிடலாம்.

நமது கழகக் கொடியை. மாற்றுக் கட்சியினர் களவாடும் விவகாரத்தில் மதுரை நகர் முன்னணியில் இருந்திருக்கிறது.

அண்மையில் கோவில்பட்டியில், இளைஞர் காங்கிரஸ் என்ற பெயரில் சிலர், கழகக் கொடியைக் களவாடும் குரங்குச் சேட்டையில் ஈடுபட்டுள்ளனர். கோவில்பட்டியில் குறிப்பிட்ட ஒரு பகுதியில் பறக்கவிடப்பட்டிருந்த நமது கழகக் கொடியை, கொடி மரத்துடன் வெட்டி வீழ்த்தி, தீ வைத்தனராம். அதுவவைகயில், கோவில்பட்டி போலீசார் குறுக்கிட்டு, ஆறு இளைஞர் காங்கிரசாரை கைது செய்தனராம்.

அவ்வறுவரில், இருவர் மது போதையில் இருந்தனராம். அவர்கள் மீது மதுவிலக்கு சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுத்ததில், ஒவ்வொருவருக்கும் ஏழு வார சிறைத் தண்டனை கிடைத்ததாம்.

மது போதையில் இருந்திருக்கின்றனர் இளைஞர் காங்கிரசார்! அதற்காக ஏழு வார சிறை தண்டனையும் பெற்றிருக்கிறார்கள் இளைஞர் காங்கிரசார்!

மதுவை, பொதுமக்கள் பருகி, மதி கெடக் கூடாதே என்ற பரோபகார சிந்தனையால், கிடைக்கும் கள்ள மது பொதுமக்களுக்குக் கிடைக்க வொட்டாமல் தடுக்கும் உயர்ந்த நோக்கத்தால், இளைஞர் காங்கிரசாரே கிடைத்த மதுவை, அருந்திவிட்டனர் போலும்!

சோழவந்தானிலும், சில நாட்களாக, நமது கழகக் கொடி, காங்கிரஸ் கட்சியினருக்கு மருட்சியைக் கொடுத்துக் கொண்டு வருவதாகக் கேள்விப்படுகிறோம். கொடிகளைக் களவாடி வருவதோடு மட்டுமல்லாமல், கழகத் தோழர்களை 'அடிப்போம் உதைப்போம்' என அச்சுறுத்தி வருவதாகவும் நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

இதுபற்றி, போலீசுக்குத் தகவல் கொடுத்தும், போலீஸ் அதிகாரிகள் அலட்சியமாக இருந்து வருவதாக நமது நிருபர் அறிவித்திருக்கிறார். இது வருந்தக்கூடியதே.

கொடிகளைக் களவாடும் காங்கிரசாரின் குரங்குச் சேட்டையை ஒடுக்க முடியாத நிலையில, நமது கழகத்தோழர்கள் கோழைகளாக இருக்கவில்லை. கழகத்தின் கண்மணி என உள்ள 'கண்ணியம்' காக்கப்பட வேண்டும் என்பதற்காகவே, காங்கிரசாரின் அடாத செயலை, நமது தோழர்கள் சகித்துக்கொள்ளுகிறார்கள் என்பதை சோழவந்தான் போலீஸ் அறிந்து கொள்ள வேண்டும்.

இதுவரையில் அலட்சியமாக இருந்தது போல் இல்லாமல், இனிமேலாவது கோவில்பட்டி போலீசை பின்பற்றி சோழவந்தான் போலீசும், காங்கிரஸ் களவதிகளின் குரங்கு சேட்டையை தடுத்து நிறுத்த முன்வர வேண்டும்.

நாம், போலீசாரிடமிருந்து சலுகை எதையும் எதிர்பார்க்கவில்லை. எல்லா குடிமக்களுக்கும் உரிமையாக உள்ள, நியாயத்தையே நாம் எதிர்பார்க்கிறோம்.

தி. மு. கழகக் கொடிகளைக் களவாடும் காங்கிரஸ் கனவான்கள்!

சோழவந்தான் போலீஸ் நடவடிக்கை எடுக்குமா?

சோழவந்தான் நகர தி. மு. கழகத்தின் கொடிகளைக் காங்கிரசார் அப்புறப்படுத்தி அக்கிரமம் விளைவிப்பதில் தீவிரமாயிருக்கிறார்களாம். 25—4—54-ந் தேதியிலிருந்து தொடர்ந்து இந்த 'கொடித் திருட்டு' நடைபெற்று வருகிறதாம். போலீசில் புகார் செய்யப்பட்டும் இதுவரையில் எந்தப் பலனும் கிடைக்கவில்லை எனவும் தெரிகிறது.

2—6—54 அன்று சன்னாசி என்ற காங்கிரஸ் தோழர் தனது தெருவில் தி. மு. கழகக் கொடி பறக்க அனுமதிக்க முடியாது எனச் சொல்லி, கொடி மரத்தைப் பிடுங்கி எறிந்துவிட்டாராம். இந்த சம்பவமும் போலீசில் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

கழகத் தோழர்கள் கண்ணியம், கட்டுப்பாடு கருதி, கலகம் செய்துகொள்ளாது, நேர்மையான வழியில் போலீசில் புகார் செய்து, நியாயம் பெற முயற்சிப்பதைத் தவறாக சில காங்கிரசார் புரிந்துகொண்டு, கழகத் தோழர்களை மிரட்டி வருகின்றனரெனத் தெரிய வருகிறது.

(ந. நி.)

சென்னை மாநில கோவில்களில் உள்ள சொத்துக்களின் மதிப்பு ரூ. 4½ கோடி

திருவரங்கம்—திருப்பதி கோவில்களில் மட்டும் ஒரு கோடி ரூபாய்க்குமேல் உள்ளது!

சென்னை மாநிலத்தில் உள்ள கோவில்களில் உள்ள நகைகளையும் மற்ற விலையுயர்ந்த பொருள்களையும் மதிப்பிட்டு அறிய, மதிப்பிடும் பரிசோதனை அதிகாரியையும், விலையுயர்ந்த கற்களை மதிப்பிடும் நிபுணர் ஒருவரையும் அரசாங்கம் நியமித்துள்ளது.

இந்தக் குழுவினர் இதுவரையில் ரூ 50,000-க்கு அதிகமான மதிப்புள்ள பொருள்களையுடைய கோவில்களை பார்வையிட்டு முடித்துவிட்டனர். இப்போது, ரூ 10,000 முதல் 50 ஆயிரம் வரை மதிப்புள்ள கோவில்களைப் பார்வையிட்டு வருகின்றனர்.

இந்த நிபுணர் குழு, திரு. ஓமந்தூரார் முதல்வராக இருந்த காலத்தில் நியமிக்கப்பட்டதாகும்.

சென்னை மாநிலத்தில் 7,800 கோவில்கள் இருக்கின்றனவாம். (சென்னை, ஆந்திரம் இரண்டு மாநிலங்களிலும் 12,000 கோவில்கள் உள்ளன.) இவைகளில் உள்ள தங்க, வெள்ளி வாகனங்கள், தங்க வெள்ளி முலாம் பூசப்பட்ட வாகனங்கள் உட்பட, நகைகள், வைரங்களின் மொத்த மதிப்பு 31—3—54-ந் தேதி வரை ரூ 4,41,22,830—11—5 என்று சொல்லப்படுகிறது

திருமலை — திருப்பதி கோவில்:
ரூ 73,21,306—2—0

ஸ்ரீரங்கம் கோவில்:
ரூ 38 406,38—8—6

மதுரை: ரூ 14,87,619—5—0

ராமேஸ்வரம்:
ரூ 27 47,801—8—6

திருப்பதி, ஸ்ரீரங்கம் ஆகிய இரு கோவில்களின் நகைகளின் மதிப்பு மட்டும் ரூ 1,11,61,944—10—6 ஆகும் எனத் தெரிகிறது.

மாரியம்மன் திருவிழா நடத்துவதில் கம்யூனிஸ்டு—காங்கிரஸ் உழவர்களுக்குள் குஸ்தி!

ஒருவர் கொல்லப்பட்டார்!

தஞ்சாவூர், ஜூன் 22—

மன்னார்குடிக்கு அருகே இருக்கும் கிராமம் ஒன்றில் காங்கிரஸ்காரர்களுக்கும்—கம்யூனிஸ்டுகளுக்குமிடையே ஏற்பட்ட கைகலப்பின் விளைவாக ஒருவர் கொல்லப்பட்டார். அதன் விளைவாக 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார்குடிக்கருகில் உள்ள வடபாதி கிராமத்தில் மாரியம்மனுக்கு திருவிழா கொண்டாடுவது சம்பந்தமாக இருதரப்பாருக்குமிடையே தகராறு ஏற்பட்டது. கிராம குளத்தில் மீன் பிடிக்கும் உரிமையை ஏலம் விட்டு அதில் கிடைக்கும் தொகை கொண்டு, திருவிழா நடத்துவது என்பதில் காங்கிரஸ்காரர்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் கருத்துவேற்றுமை ஏற்பட்டது. வேற்றுமை முற்றி கைகலப்பாக வளர்ந்து ஒருவர் படுகொலை செய்யப்பட்டு முடிந்தது. கதிர்வேல வாய்க்காரன் என்பவர் தான் கொல்லப்பட்டிருக்கிறார்.

இந்தக் கொலை சம்பந்தமாக காங்கிரஸ் விவசாய சங்கத் தலைவர் பழனியாண்டி, இன்னும் ராமையா, முருகையா, குமாரசாமி, தட்சிணாமூர்த்தி ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

மதுவிலக்கு ஒழிந்தாலும் ஐந்தாண்டு திட்டம் வெற்றி பெற வேண்டுமாம்!

நேரு பண்டிதர் போக்கு பற்றி மைசூர் மந்திரி

மைசூர், ஜூன் 21—

"மைசூர் மாநிலத்தில் ஐந்து அல்லது ஆறு மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்டிருந்த மது விலக்கு, வெற்றி தந்திருக்கிறது எனச் சொல்வதற்கில்லை,"

என்று, மைசூர் மாநிலக் கல்வி அமைச்சர் ராமச்சந்திர ராவ் ஒப்புக் கொண்டுள்ளார்.

'ஒன்று மதுவிலக்கை தவிருங்கள்; அல்லது அதை மாநிலம் முழுதும் அமுல் செய்யுங்கள்' எனக் கேட்ட காங்கிரஸ் ஊழியர்களுக்கு அவர் பதிலளிக்கையில், "நாடு முழுவதும, மதுவிலக்கை அமுல் செய்யும் கொள்கைபற்றி மத்திய அரசின ஆணையை மாநில அரசுகள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன," என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:—

"பண்டித நேரு 'மதுவிலக்கு ஒழிந்தாலும் பரவாயில்லை; எப்படியாயினும் ஐந்தாண்டுத் திட்டம் வெற்றி பெற்றால் சரி' என்று கருதுவதாகத் தெரிகிறது. பொருளாதார நெருக்கடியின் காரணமாகவும்—சில மாநிலங்கள் மது விலக்குத் திட்டத்தை அமுல் செய்வது கடினமெனக் கருதுகின்றன," என்றார்.

சிட்டகாங் நகரில் சிகரெட் பஞ்சம்!

கிழக்கு வங்கத்திற்கு கராச்சியிலிருந்து வரவேண்டிய கப்பல் குறித்த காலத்தில் வந்து சேராததால் சிட்டகாங் நகரத்தில் சிகரெட்டுகள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளன.

மாதந்தோறும் இங்கு 120 லட்சம் சிகரெட்டுகள் அழியுமாம்! மாரிக் காலத்தில் 160 லட்சம் சிகரெட்டுகள் செலவாகும் என்றும் சொல்லப்படுகிறது.

சிட்டகாங் நகரத்திலுள்ள ஒரு தொழிற்சாலையில் தினந்தோறும் 10 லட்சம் சிகரெட் உற்பத்தியாகிறது என்றும் சொல்லப்படுகிறது.

ஷேக் அப்துல்லாவுக்கு விடுதலை கிடையாதாம்!

"காஷ்மீர் முன்னாள் முதல்வர் ஷேக் அப்துல்லா சமீபத்தில் விடுதலை செய்யப்படமாட்டார். நாட்டு நலன்கள் பாதுகாக்கப்பட எத்தனை நாள் தேவைப்படுகிறதோ அத்தனை நாள் அவர் அடைக்கப்பட்டுத்தான் இருப்பார்," என்று காஷ்மீர் சர்க்கார் உயர்தர அதிகாரி ஒருவர் கூறினார்.

330 பேர் கொண்ட இனத்தில் 13 ஜாதிகள்!

‘டோட்டோ’ மக்களின் அதிசய வாழ்வு!

கல்கத்தா, ஜூன் 23—பூடான் எல்லையில் உள்ள டோடோ இனத்தவர்கள் மொத்தமாக 330 பேர்கள்தான். பூடியர் போன்று இவர்களது முகத்தோற்றமிருந்தாலும், டோடோ மக்கள் தனி இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது.

இவர்களது மூதாதையர்கள் யார் என்பதை அறிவது மிகவும் கடினமாக இருக்கிறதாம்.

ஜல்பைகுரி மாவட்டத்தில் டோடோ மக்கள் வசிக்கும் பகுதி அரை சதுர மைல் கூட இருக்காது. ஆனால் 330 கொண்ட இந்த தனி இனத்தைச் சேர்ந்தவர்கள் 13 ஜாதியாக பிளவுபட்டிருக்கிறார்கள் ஒருவன் வேறு ஜாதியில் திருமணம் செய்து கொள்ளக்கூடாது.

மலை ஜாதிப் பிரிவு மக்களான இவர்களில் ஒருவர் கூட கல்வி அறிவு பெற்றவர் கிடையாது.

பூமிக்கு மேல் ஐந்தடி உயரத்தில் வீடுகளைக் கட்டிக்கொண்டு இவர்கள் வாழ்கிறார்கள். ஆரஞ்சுச் செடிகளைப் பயிரிடுவதே இவர்கள் தொழில்.

இரண்டு கடவுள்கள் இவர்களுக்கு உண்டு; மதுவும் மாமிசமும் படைத்து டோடாக்கள் தங்கள் தெய்வத்தை வணங்கினாலும் இவர்களிடையே மதகுருமார்கள் கிடையாது.

இந்த மக்களின் வாழ்வைப் புனர் அமைக்க மேற்கு வங்க சர்க்கார் ஆவன செய்வர் என்று தெரிகிறது.

டில்லி விழாவில் தமிழருக்கு இடமில்லை

தென் இந்திய நடிகர் சங்கத்தின் கண்டனம்

சென்னை, ஜூன் 22—புதுடில்லியில் நவம்பர் மாதத்தில் நடைபெறும் அகில இந்திய நாடக விழாவிற்கு இந்தியாவில் உள்ள எல்லாக் கலைக் கழகங்களுக்கும் அழைப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

ஆனால் தென் இந்திய நடிகர் சங்கத்திற்கு மட்டும் அழைப்பு அனுப்பப்படவில்லையாம்.

தென் இந்திய நடிகர் சங்கம் இச் செய்கைக்கு வருந்தி அறிக்கை ஒன்று வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதற்கான நடவடிக்கைகளை அகில இந்திய நாட்டிய, நடன கழகத்தின் சென்னைக் கிளை எடுக்க வேண்டுமென்று அந்த அறிக்கை கூறுகிறது.

கோவா சர்க்காருக்கு நாமம்!

அரிசி தருவதாக சொல்லி ரூ. 35 லட்சம் அபேஸ்!

பஞ்சிம், ஜூன் 23—கோவா அரசாங்கத்திற்குக் குறைந்த விலையில் அரிசி தருவதாகச் சொல்லி ஏமாற்றி ரூ 35 லட்சத்தை தட்டிப் பறித்துக் கொண்டு சென்றுவிட்டாராம் ஒரு அன்னிய ‘வியாபாரி.’

தனது இரண்டு குழந்தை, மனைவி இவர்களுடன் இரண்டு மாதத்திற்குமுன் கோவாவிற்கு வந்த அந்த ‘வியாபாரி’ ஒரு பெரிய ஆடம்பரமான விடுதியில் தங்கினாராம். கோவா கவர்னரின் அன்பிற்கும், நம்பிக்கைக்கும் பாத்திரமாவதற்காக பிரமாதமான விருந்துகள் நடத்தினாராம்.

பிறகு, கள்ளக் கையெழுத்திட்டு தந்தாவேஜுக்களை கோவா பாங்கியில் கொடுத்துவிட்டு 35 லட்சத்தையும் பெற்றுக் கொண்டு அந்த ‘வியாபாரி’ மாயமாய் மறைந்துவிட்டாராம்.

அவர் தங்கியிருந்த விடுதிக்காரர்களுக்குக்கூட தான் தங்கியிருந்து உண்டு களித்த செலவுத் தொகையான ரூ. 7 ஆயிரத்தையும் நாமமேபோட்டு கம்பிநீட்டிவிட்டாராம்!

தி மு க. பொதுச்செயலாளர்

அண்ணாதுரை

சுற்றுப் பயண நிகழ்ச்சி

★

26, 27—6—54: வேலூர் மாநாடுகள்

4—7—54: ஆவடி தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

10, 11—7—54: போதட்டூர் பேட்டை மாநாடுகள்

நாடெங்கும் விற்பனையாகிறது!

12 பக்கங்கள் **தென்றல்** பெரிய அளவில்

வார ஏடு

ஆசிரியர்: கண்ணதாசன்

★

★ திருடித்தான் புகழ் பெற்றான் ஷேக்ஸ்பியர்

★ பொது உடைமை தமாஷ்!

★ இலக்கியத்தின் காதல்!

★ இயக்கப் பத்திரிகைகள்

★ நமது குடும்பம்

★ கூட்டுக் குரல்

இன்னும் ஏராளமான விஷயங்கள்

தனிப் பிரதி 2 அணா :: ஆண்டுச் சந்தா 6 ரூ.

★

‘தென்றல்’, சென்னை-14

பூரண சூரிய கிரகணம்

★

அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ச்சி!

தெஹ்ரான் ஜூன் 23—ஜூன் 30-ந் தேதியன்று தெரியவிருக்கிற பூரண சூரிய கிரகணத்தைக் கண்டு ஆராய 8 அமெரிக்க விஞ்ஞானிகள் ஈரானுக்கு வந்துள்ளனர்.

அன்று சந்திரனின் நிழல் நெப்ராஸ்காவிலிருந்து இந்தியாவிற்கு மணிக்கு 8,000 மைல் வேகத்தில் சூரிய கிரஹணத்தைத் தாங்கிவரும் எனச் சொல்லப்படுகிறது.

ஜியார்ஜ் டவுன் பல்கலைக் கழக வானிலை ஆராய்ச்சி நிலைய முதல்வரான டாக்டர் பிரான்சிஸ் ஹேடன், ஒஹியோ பல்கலைக் கழகத்தின் டாக்டர் அல்லன் ஹேநெக் ஆகியோரும் வந்துள்ளவர்களில் முக்கியமானவர்கள்.

ஈரானிய அரசாங்கம் இந்த விஞ்ஞான சோதனைக்கு உதவியளிக்கும் வகையில், உதவி விஞ்ஞானிகளையும், விஞ்ஞான சாதனங்களையும் கருவிகளையும் தந்துதவும்.

இந்த பூரண கிரகணத்திற்கு இவ்வளவு முக்கியத்துவம் தரப்படும் காரணம் என்னவெனில் 2151-ம் ஆண்டு ஜூன் 14-ந் தேதி வரை (சுமார் 200 ஆண்டுகள்) இத்தகு ஒரு பூரண கிரகணம், வடஅமெரிக்கா, ஐரோப்பா மத்திய கிழக்குப் பிரதேசங்களைத் தொடர்ந்து கொண்டு ஏற்படாது எனச் சொல்லப்படுகின்றது.

இந்தக் கிரகணத்தின் ஒரு பகுதியையாவது உலகத்தின் மூன்றில் ஒரு பங்கு மக்கள் காண முடியுமாம்!

உலகத்தின் 200 விஞ்ஞானிகள், நவீனமான 16 வான ஆராய்ச்சிக் கருவிகளுடன், கிரகணத்தைப் படம் பிடித்து ஆராய்வர்.

ஈரானின் வடக்குப் பகுதியிலுள்ள கார்ஜுன், பந்தர்ஷா எனும் இடங்களில், மிக நுண்ணிய கருவிகள் கொண்ட ஆராய்ச்சிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது எனத் தெரிகிறது.

★

இந்திய சர்க்கார் ஏற்பாடு

புதுடில்லி, ஜூன் 23—ஜோத்பூருக்கு அருகில் உள்ள பாலோடி என்னும் இடத்தில் ஜூன் 30-ந் தேதியன்று பூரண சூரிய கிரகணத்தைப் பார்ப்பதற்காக விசேட ஏற்பாடுகளை மத்திய அரசாங்கத்தின் வானிலை ஆராய்ச்சி இலாகா செய்துவருகின்றது.

1898-ம் ஆண்டு ஜனவரிக்குப் பின் தெரியும் முதல் பூரண சூரிய கிரகணமாகும் இது.

இந்தக் கிரகணத்தின் ஒரு பகுதியை டில்லியில் அன்று மாலை 6-30—7-23 மணிக்கிடையில் பார்க்கலாமாம்.

பாலோடியில் சூரியன் மறைவுக்கு 7 நிமிடங்களுக்கு முன் பூரண சூரிய கிரகணத்தை 35 வினாடிகள் பார்க்க முடியும் எனத் தெரிகிறது.

பாகிஸ்தானில் உள்ள குவெட்டாவில் இந்த பூரண சூரிய கிரகணம் இன்னும் தெளிவாகத் தெரியுமாம்.

இந்தக் கிரகணத்தின் சுற்றுவளைவு, அமெரிக்கா, கனடா கிரீனலாந்து, நார்வே, ரஷியா, ஆப்கனிஸ்தான், பாகிஸ்தான் வடமேற்கு இந்தியா ஆகிய நாடுகளையும் உள்ளடக்கியதாயிருக்கும்.

திருமணங்கள்

12—6—54ல், திருவையாற்றில் தோழர் செல்வராஜிக்கும்—தோழியர் லீலாஹெப்சிக்கும் தஞ்சாவூர் நிஜிந்திரார் முன்னிலையில் பதிவுத் திருமணம் நடைபெற்றது. அன்று மாலை மணமகன் இல்லத்தில் வரவேற்புக் கூட்டம் தோழர் வையாபுரி தலைமையில் நடைபெற்றது தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். மதுரான் மாலை தி. மு. கழகச் செயலாளர் தோழர் வையாபுரி இல்லத்தில் மணமக்களுக்கு தேனீர் விருந்து நடைபெற்றது. தோழர்கள் பலர் பாராட்டுரை வழங்கினர். இதன் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பாக அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

⁂ ⁂ ⁂

7—6—54 காலை 9 மணிக்கு மேட்டூரில் தோழர் வெ. இராசமாணிக்கத்திற்கும்—தோழியர் ஞானாம்பாள் அம்மையாருக்கும் புதிய முறையில் சேலம் டாக்டர் கே. ஆர். கோபால் தலைமையில் திருமணம் நடைபெற்றது. மணமக்களைப் பாராட்டியும், சீர்திருத்தத் திருமணம் என்பது பற்றியும் தோழர்கள் டி. கே. இராமச்சந்திரன், க. கு சின்னசாமி சொற்பொழிவாற்றினர்.

திருமண நிகழ்ச்சிக்குப் பின்னர் தோழர் பி. க. ச. மணி அவர்களின் பெண் குழந்தைக்கு ‘பூமாலை’ என்று டாக்டர் கோபால் அவர்களால் பெயரிடப்பட்டது இப்பெயர் சூட்டுவிழாவின் பொட்டி ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்-நன்றியுடையது-பொறுப்பாளர்.

* * *

13—6—54 ஞாயிறு காலை 9 மணிக்கு கீழ்விசாரத்தில், தோழர் கெ. ஜெயவேல் தலைமையில், தோழர் ராசமாணிக்கம்—தோழியர் அன்னலட்சுமி சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது. தோழர்கள் அ. வ. வேலர், வில்வம் ‘சீர்திருத்தத் திருமணம்’ என்பதைப் பற்றிப் பேசினர். தோழர்கள் சிலர் தம்பதிகளுக்கு பகுத்தறிவுப் புத்தகங்கள் பரிசாக வழங்கினர். இத்திருமணத்தின் நினைவாக ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

* * *

சேவூர்(ஆரணி வடஆற்காடு) 11—6—54 காலை 10 மணிக்கு தோழர் கண்ணதாசன் தலைமையில் தோழர் வி இ. செயராமனுக்கும்—தோழியர் இரத்தினம் அம்மையாருக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது. தோழர்கள் என். வி. நடராசன், போளூர் சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். வி. முருகேசன் இசை பாடினார். மணமக்கள் அனைவருக்கும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்—இத் திருமணத்தின் நினைவாக ‘நம் நாடு’ இதழ் வளர்ச்சிக்கு ரூ 2 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றியுடையது—பொறுப்பாளர்.

⁂ ⁂ ⁂

சுருமப்பட்டியில் தோழர் கிருஷ்ணன் — தோழியர் மாரியாயி திருமணம் 9—6—54 காலை 7 மணிக்கு தோழர் இந்திரஜித் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இளவழகன், டாக்டர் ராதாகிருஷ்ணன் ஆகியோர்கள் மணமக்களைப் பாராட்டி வாழ்த்துரை கூறினர். மணமக்கள் சார்பில் ‘நம் நாடு’ வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது வரப்பெற்றோம் — நன்றியுடையது—பொறுப்பாளர்.

வட ஆற்காடு மாவட்ட தி. மு. கழக 2-வது

சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

✶

ஜூன் மாதம் 26, 27-ந் தேதிகளில் வேலூர் டவுன் ஸ்டேஷனுக்கு எதிரில் அமைந்துள்ள அழகிரி பந்தலில் — முத்து அரங்கில் நடைபெறும்

26—6—54 சனி:	27—6—54 ஞாயிறு:
சமூக சீர்திருத்த மாநாடு	**அரசியல் மாநாடு**
தலைவர்: ஈழத்து அடிகள்	தலைவர்: கே. ஏ. மதியழகன்
திறப்பாளர்: இரா. நெடுஞ்செழியன்	திறப்பாளர்: நாஞ்சில் கி. மனோகரன்

இரு நாட்களிலும் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களும், முன்னணி வீரர்களும், திராவிட சட்ட சபை எம். எல். ஏ.-க்களும் கலந்துகொள்வர்

✶

இசை முரசு நாகூர் அனிபா குழுவினரின் இசை விருந்து இரு நாட்களிலும் நடைபெறும்

இரு நாட்களிலும் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் நடிக்கும்

‘அம்மையப்பன்,’ ‘சந்திரமோகன்’ நாடகங்கள் நடைபெறும்

இரண்டு நாட்களுக்கும் கட்டணம் (நாடகங்கள் உட்பட): ரூ. 5, 3, 2, 1; பெண்களுக்கு அணா 8

—வரவேற்புக் குழுவினர்

உலக அரங்கில்

டோக்கியோ :
ஜப்பானின் மத்திய பகுதியில் ஒசாகா நகருக்குத் தெற்கே பலத்த மழை பெய்ததால் டோக்கியோ வரையில் சேதம் ஏற்பட்டதாம். 36 பேர் மாண்டனர்; 7 பேரைக் காணோம்; மூவாயிரம் வீடுகள் நாசமாயின என்று தெரிகிறது.

• • •

அமெரிக்கத் துருப்புகள் ஜப்பானிலிருந்து அக்டோபர் மாதம் முதல் வெளியேறுமென்று தெரிகிறது.

★

பெல்கிரேட் :
யூகோ தலைநகரில் தங்கியுள்ள ஐ. நா. சபைத் தலைவி திருமதி விஜயலட்சுமி பண்டிட்டுக்கு யூகோ பாராளுமன்ற சபாநாயகர் விருந்தளித்தார் என்று தெரிகிறது.

★

அம்மான் :
ஏழு வார காலமாக ஜோர்தானின் பதவி வகிக்கும் அபு இல் ஹூடா சர்க்கார், ஜோர்தான் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே காணப்படும் கருத்து வேற்றுமையினால் பாராளுமன்றத்தையே கலைத்துவிட்டனர்.

★

தெஹ்ரான் :
ஈரான் எண்ணெய்க் கிணறுகள் பற்றிய பேச்சுவார்த்தைகள் ஈரான் சர்க்காருக்கும் எண்ணெய்க் கம்பெனிக்குமிடையே ஆரம்பமாயின என்று தெரிகிறது.

★

லண்டன் :
பி. பி. சி. ஒலிபரப்பு கம்பெனிக்குப் போட்டியாக பிரிட்டிஷ் சர்க்கார் வர்த்தக டெலிவிஷன் நிலையம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று கூறும் மசோதா காமன்ஸ் சபையில் நிறைவேறியது.

* * *

பெர்க்ஷையரில் தீப்பிடித்துக் கொண்ட மருத்துவ நிலையம் ஒன்றிலிருந்து 15 குழந்தைகளைக் காப்பாற்றிய 41 வயதான தோழியர் பிடா ஹாலக்குக்கு 'ஜார்ஜ் மெடல்' பரிசளிக்கப்பட்டிருக்கிறது.

★

வியன்னு :
வியன்னு ஆராய்ச்சி நிலையம் ஒன்றைச் சேர்ந்த பேராசிரியர் பெர்டிகுண்டு என்பவர், அணுகுண்டு, நீர்வலிக் குண்டு இவைகளால் வானவெளி பாதிக்கப்பட்டு, வருங்கால மாறுதல்கள் ஏற்படும் என்பதை மறுத்தார்.

★

நைரோபி :
பம்பாய் மேயர் தபாபாய் பட்டேல் கிழக்காப்பிரிக்காவில் 15 நாள் நல்லெண்ணச் சுற்றுப் பிரயாணம் செய்ய நைரோபி வந்து சேர்ந்தார்.

★

ஹனோய் :
சிவப்பு நதியின் இரு கரைகளிலும், ஹனோய்க்கு இருபது மைலில் வியட்மின் துருப்புகளுக்கும், பிரெஞ்சுத் துருப்புகளுக்கும் கடுமையான போர் நடைபெறுகிறது என்று பிரெஞ்சு இராணுவ காரியாலயம் அறிவிக்கிறது.

★

ஜினீவா :
எல்லாப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் மகாநாட்டில் பேசியும், இந்தோ—சீனப் போர் நிறுத்தம் பற்றி முடிவிற்கு வர முடியவில்லை என்று தெரிகிறது.

* * *

சீனப் பிரதமரை அழைத்து வர இந்தியாவிலிருந்து சென்ற விமானம் ஜினீவா வந்து சேர்ந்தது.

வாஷிங்டன் :
வெள்ளிக்கிழமையன்று ஆரம்பமாகவிருக்கும் ஆங்கிலோ — அமெரிக்கப் பேச்சு வார்த்தைகள் பற்றி ஐசன் ஹோவர் வெள்ளை மாளிகையில் தனது ஆலோசகர்களுடன் கலந்து பேசினர்.

★

சைகோன் :
வியட்மின் துருப்புகள் கடத்திச் சென்ற அமெரிக்க நிபுணர்கள் ஐந்து பேரையும் வியட்மின் துருப்புகள் லைசூ கடலுக்குக் கொண்டு சென்று தென் கரையில் இறக்கிவிட்டனர் என்று தெரிகிறது.

★

கியூபா :
ஹவானா பல்கலைக் கழக மாணவர்கள் குவாடிமாலா ஆதரவு நாள் கொண்டாடிய போது போலீசார் கூட்டத்தைக் கலைக்க முயன்றபோது, பல்கலைக் கழக கட்டிடத்திற்குள்ளிருந்து சுடப்பட்டு ஒரு போலீசார் படுகாயமடைந்தார் என்று தெரிகிறது.

★

ஹாங்காங் :
ஜூன் 16-ந் தேதி ஹாங்காங்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்தியக் கலைப் பொருள் கண் காட்சிக்கு இதுவரை பதினெட்டாயிரம் சீன மக்கள் வந்து சென்றனர் என்று தெரிகிறது.

★

நியூயார்க் :
ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்திற்குச் செல்ல தென்மேற்கு ஆப்பிரிக்க மாணவர் ஒருவருக்கு பாஸ்போர்ட் வழங்க மறுத்தது பற்றி தென்ஆப்பிரிக்க சர்க்காரிடம் தலையிட வேண்டுமென்று மெக்சிகோ, பிரேசில் சர்க்கார்கள் திருமதி விஜயலட்சுமி பண்டிட்டை கேட்டுக் கொண்டனர்.

★

பாங்காக் :
தாய்லாந்து முதல் அமைச்சர் பிபுல் சங்கிராம் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் ஜனநாயக நாடுகளிலிருந்து எல்லாவிதமான உதவிகளையும் தாய்லாந்து ஏற்றுக் கொள்ளுமென்று கூறினர்.

★

பான் :
குவாடிமாலாவுக்குச் செல்லும் ஜெர்மன் கப்பல்களை அமெரிக்க அதிகாரிகள் சோதனையிடுவதை மேற்கு ஜெர்மனி மறுக்காது என்று தெரிகிறது.

★

பாரிஸ் :
குவாடிமாலாவுக்குச் செல்லும் பிரெஞ்சுக் கப்பல்களைச் சோதனையிட அமெரிக்க அதிகாரிகளை அனுமதிக்க முடியாதென்று பிரெஞ்சு சர்க்கார் மறுத்துவிட்டது.

★

லக்சம்பர்க் :
ஜெர்மனி உள்பட ஐரோப்பிய நாடுகள் சேனை ஏற்படுத்துவது பற்றி பிரான்சின் கருத்தை, பெல்ஜியம், ஹாலந்து, லக்சம்பர்க் ஆகிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் இரகசியமாய்க் கலந்து பேசினர்கள்.

★

மெல்போர்ன் :
ஆஸ்திரேலிய தொழிற் கட்சித் தலைமையில் போட்டியும், பிளவும் காணப்படுகிறதாம். இந்த நிலைமைக்கு மாறாக் காணசிஸ் அடலி அழைக்கப்படுவார் என்று தெரிகிறது.

★

ஆம்ஸ்டர் டாம் :
பென் கழகத்தின் 26-வது உலக காங்கிரஸ், இலக்கியங்கள் மீது தடை விதிக்கக்கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றியது. வெறுப்பு, தேசிய எதிர்ப்பு நிலைகளை வளர்க்கும் இலக்கியங்களை வளரவிடுவது சரியல்ல என்று மேலும் அந்த காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியது.

★

கொழும்பு :
இலங்கை இந்தியத் தூதுவராலயத்தின் முதல் செகரடரியான சாகி, பீக்கிங்கிற்கு மாற்றப்பட்டிருக்கிறார். அவருக்குப் பதில் நியமிக்கப்பட்ட பிரஜாபதி கொழும்பு வந்து சேர்ந்தார்.

கொள்கைமாறுபாட்டிற்காக செய்யப்பட்ட படுகொலை!

அச்சமூட்டி ஆதிக்கம் பெற புரிந்த அரசியல் படுகொலை!

கொலை புரிந்தவர்களுக்குத் தூக்குத் தண்டனை உறுதிப்பாடு

சென்னை, ஜூன் 23—
புன்னூர் தலையாரி இராமலிங்கம் என்பவரைக் கொலை செய்த நாகபட்டிசாம்பான், வெங்கட்ட சாம்பான் என்ற இருவருக்கும் நாகப்பட்டினம் செஷன்ஸ் நீதிபதி தூக்கு தண்டனை விதித்திருக்கதை இன்று சென்னை உயர்நீதி மன்ற விடுமுறை நீதிபதிகள் பி. ராஜகோபாலனும், பி. வி. பாலகிருஷ்ணய்யரும் ஊர்ஜிதம் செய்தனர்.

"எதிரிகள் இருவரும் கம்யூனிஸ்டு உழவர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்; இவர்களுக்கு மாறுபட்ட கொள்கை கொண்ட உள்ளூர் உழவர்கள் யாவரையும் இவர்கள் தங்கள் பக்கம் திருப்ப முடியவில்லை; இராமலிங்கம் என்பவர் புன்னூர் கிராம தலையாரி; கம்யூனிஸ்டு கட்சிக்கு மாறுபட்ட உழவர்களுக்கு அவர் தலைவர்; கம்யூனிஸ்டு உழவர் சங்கத்தின் தோல்விக்கு இவர்தான் பொறுப்பு என்று கருதப்பட்டது; இதனால் இராமலிங்கத்துக்கும், எதிரிகளுக்குமிடையே விரோதம் இருந்தது. இதன் விளைவாக சென்ற ஆண்டு நவம்பர் மாதம் 7-ந் தேதியன்று இரவில் புன்னூரில் உள்ள ஒரு டீக்கடைக்கு எதிரில் அரிவாள், வேல், கம்புகளுடன் இராமலிங்கத்தை தாக்கினார்கள்; பின்னர், இராமலிங்கம் ஆஸ்பத்திரியில் இறந்தார்."

இதுதான் பிராசிகியூஷன் வழக்கு.

எதிரிகள் இருவருக்கும் கீழ் தஞ்சாவூர் செஷன்ஸ் நீதிபதி மரண தண்டனை விதித்தார்.

இதை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்டிருந்த அப்பீலில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் கீழ்க் கோர்ட் தண்டனையை ஊர்ஜிதம் செய்தனர்.

"கோர்ட் முன்பு உள்ள சாட்சியத்தின்படி எதிரிகளை செஷன்ஸ் நீதிபதி தண்டித்தது நியாயம்தான்; முன்னேற்பாட்டுடன் செய்த இந்தக் கொலைக்கு தூக்கு தண்டனைதான் சரியான தண்டனை." என்று நீதிபதிகள் தமது தீர்ப்பில் கூறினர்.

நல்லெண்ணச் செய்தி வரும்!

புதுவை நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிறது. மக்கள் பல துறைகளிலும் கஷ்டங்களை அடையவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது.

மக்களின் மனோநிலையை உணராமல் பிரெஞ்சு அதிபர்கள், இராணுவ வெறி பிடித்தலைய ஆரம்பித்துவிட்டனர்; ஆயுதந் தரித்த பிரெஞ்சுப் போலீசார், மக்களை மிருகமென எண்ணி, மூர்க்கத்தனமான முறைகளைக் கையாண்டுள்ளனர்; அவர்களது கையாட்களான குண்டர்கள் தொல்லையும் குறைந்தபாடில்லை.

இவற்றுக் கிடையே ஒரு நல்ல செய்தியும் வருகிறது— திடீரென பெர்னே நாட்டில் பிரெஞ்சுப் பிரதமரைச் சந்தித்த சூ-என்-லாய், புது டில்லி வருகையின், அவர் மூலம் இந்திய சர்க்காருக்கு புதுவை பகுதிகள் பற்றிய ஒரு நல்லெண்ணச் செய்தியை பிரெஞ்சுப் பிரதமர் அனுப்பி வைக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது.

கழகக் கூட்டம்

☆

முத்துப்பேட்டை
திரு. ஏ. எஸ். என். திடலில் 25—6—54 மாலை 5 மணிக்கு
பேசுவோர் :
ஈ. வே. கி. சம்பத்
என். எஸ். இளங்கோ
எஸ். அப்பாவு

சொற் பயிற்சிக் கூட்டம்
25—6—54 மாலை 6 மணிக்கு சென்னை, வண்ணையம்பதி நியாயவாதர் பகுத்தறிவு மன்றச் சார்பில், தோழர் கா. சிவலிங்கம் தலைமையில் 'நிலையும் நினைப்பும்' எனும் பொருள் பற்றி தோழர்கள் ரத்தினம், எம். என். மணி, மூ. கக்காலன் ஆகியோர் பேசுவர்.

சென்னை 44-வது வட்ட தி.மு.க. உறுப்பினர்கட்கு
26-6-54 இரவு 8-30 மணிக்கு எம். கே. அம்மன் கோயில் தெரு, செட்டியார் தோட்டத்தில் செயற் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும்.

திருமணம்
25—6—54-ல், திருக்கோட்டியூரில் தோழியர் செல்லத்தம்மாளுக்கும்—தோழர் நடராஜனுக்கும் மணமகன் இல்லத்தில் சீர்திருத்தத் திருமணம் நடைபெறும்.

மனவளம்!

வெள்ளையருக்கும் - கருப்பருக்கும் ஒன்றே!

கேப்டவுன், ஜூன் 23—
தென் ஆப்பிரிக்க விஞ்ஞான தொழில் கவுன்சில் நடத்திய ஆராய்ச்சியிலிருந்து தென் ஆப்பிரிக்கக் கருப்பர்களை வெள்ளையருடன் ஒப்பிட்டுப் பார்த்ததில், மனப்போக்கு எண்ணங்கள் அடிப்படையில், இருவருக்கிடையேயும் வித்தியாசமில்லை என்று கூறப்படுகிறது.

இக் கழகமானது, நேர்மை, நடத்தை, பழக்க வழக்கங்கள், நீதி, நிர்வாகம் பற்றிய மேனாட்டுக் கருத்துக்கள் பற்றி கல்வி கற்ற ஆப்பிரிக்கரின் மனப்போக்கு பற்றி ஆராய்ச்சி நடத்துகிறது.

ஜாதிப் பாகுபாடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் உணவு உற்பத்தி செய்பவருக்கு 30 அல்லது 40 சதவிகிதம்தான் இந்து கிடைக்கிறது. பெரும் பகுதிப் பலனை நிலச்சுவான்தார்கள் தட்டிப் பறித்துக்கொண்டு போகின்றனர்," என்றார்.

செய்திக்கதிர்

விபத்து
இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமானம் ஒன்று கல்கத்தா அருகே விபத்திற்கு உள்ளாயிற்று விமான அதிகாரிகள் ஐந்து பேரும், ஒரு சார்ஜெண்டும் மரணமடைந்தனர் என்று தெரிகிறது.

★

தடுப்புக் காவல்
சுதந்தரத்தின் சரித்திரத்திலேயே முதல் தடவையாக தடுப்புக்காவல் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. காலித்தனத்தை ஒழிக்கவே இந்த ஏற்பாடு என்று தெரிகிறது.

★

தூதுவராலயம்
தென் ஆப்பிரிக்காவில் உள்ள இந்தியத் தூதுவராலயத்தை மூடிவிடுவதென இந்திய சர்க்கார் முடிவு செய்துவிட்டது. இது பற்றிய அறிக்கை 27-ந் தேதி யன்று வெளியிடப்படலாம்.

★

ஏக்கம்
"முஸ்லிம் லீகின் மதிப்பும் செல்வாக்கும் மங்கிக் கொண்டு வருவது துரதிருஷ்ட வசமானது," என்று பாகிஸ்தான் பிரதமரும் முஸ்லிம் லீகின் தலைவருமான முகமது அலி அறிக்கை ஒன்றில் கூறுகிறார்.

★

மறுப்பு
அரசியல் நிர்ணய சபைக்குப் போகவேண்டுமென்று பாக். சர்க்காரிடம் தான் அனுமதி கூடக் கேட்கவில்லை என்று பக்துன் ஹக் கூறுகிறார்.

★

டிஸ்மிஸ்
'டான்' பத்திரிகையின் துணை ஆசிரியர் ஷக்கூரையும், பிரதம உதவி ஆசிரியர் அகமது ஹாசனையும் பத்திரிகை நிர்வாகிகள் வேலையிலிருந்து நீக்கிவிட்டனர். இவர்கள் சென்ற மாதம் பாக். சர்க்காரால் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுப் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

★

வானொலி
சென்னை வானொலியில் 100 கிலோவாட் சக்தியுள்ள குறுகிய அலையிலும், 20 கிலோவாட் நடுத்தர அலையிலும் இரண்டு ஒலிபரப்பு சாதனங்கள் அமைக்கப்படும் என்று தெரிகிறது.

★

கல்லூரி அனுமதி
சென்னை ராஜ்யத்தில் வைத்தியக் கல்லூரிக்கு 2000, எஞ்சினியரிங் கல்லூரிக்கு 800, விவசாயக் கல்லூரிக்கு 400 மனுக்கள் வந்திருக்கின்றன. எஞ்சினியரிங் கல்லூரியில் 181 பேரும், விவசாயக் கல்லூரியில் 108 பேரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். செங்கல்பட்டு வைத்தியக் கல்லூரியில் 40 ஸ்தானங்களுக்கு 78 மனுக்கள் வந்திருக்கின்றன என்று தெரிகிறது.

★

தோழமை விலை
தோழமை, தோழமை மாவு விலைகளைக் குறைக்கவேண்டுமென்று சர்வதேச தோழமை போர்டுக்கு இந்தியா யோசனை கூறியுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்களால் அருணா அச்சகத்தில் அச்சிட்டுப் பெற்று (50, நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.